People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
# 01.10.2009 முதல் 16.10.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1. | 1.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்பத்தூர் அருகே சேவினிபட்டடியைச் சேர்ந்தவர் கருப்பன் இவர் தனது பட்டா நிலைத்தை தனது மருமகன் பெயருக்கு மாறுதலுக்கு உலகு சகோதரர் ராசுவுடன், சென்று வடக்கு இளையாத்தங்குடி வி.ஏ.ஓ.பஞ்சநாதனை அனுகியபோது 1500, லஞ்சம் வாங்கிய பஞ்சநாதனை லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸார் கைது செய்தனர். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 2. | 1.10.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** ஸ்ரீவைகுண்டம் செய்துர்பக நல்லூர் முஸ்லீம் புதுத்தெருவைச் சேர்ந்த முசாம்பிஸ் இவர் முகைதீன் ஜாபிலா பள்ளி வாசலுக்கு தொழுகையில் குரானை மட்டும் பின்பற்றும் முறையில் வழிபாடு நடத்தியதால் இவரை அக்கிராம மக்கள் அப்பள்ளிவாசல் செயலாளர் முகமதுஅலி இவரது குடும்பத்தை ஊரை விட்டு ஒதுக்கி வைத்தார் இது குறித்து முசாம்பிஸ் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் மனு கொடுத்தார் கோர்ட் இம்மனுவிற்கு பதிலளித்து தூத்துக்குடி கலெக்டர் மற்றும் எஸ்.பிக்கு நோட்டிஸ் அனுப்பா உத்தரவு விட்டார். | சமூக புறக்கணிப்பு | தினகரன் |
| 3. | 1.10.09 | **மதுரை மாவட்டம்:** திண்டுக்கல் மாவட்டம், சூலக்கோட்டை அருகேயுள்ள முருகத்தூரன்பட்டியைச் சேர்ந்த ஜான்கென்னடி, உறங்கான்பட்டியைச் சேர்ந்த இனமனூர் முருகன் என்பவரும் சேர்ந்து ஜே.சி.பி, இயந்திரம் மூலம் தொழில் செய்து வருகின்றனர், இவர்கள் வரிச்சூர் அருகே அனுமதி இல்லாமல் ஜே.சி.பி. மூலம் கிரானைட்கற்களை ஏற்றி சென்றவர்களை கனிமவனத்துறை அதிகாரி பிடித்து அபாரத்தொகையை மதுரை R.D.O.விடம் செலுத்தியும் ஜே.சி.பி. இயந்திரத்தை திருப்பி ஒப்படைக்க மதுரை வடக்கு தாலுகா அலுவலகத்தில், பணிபுரியும் துணை தாசில்தார் கண்ணதாசன் மற்றும் உதவியாளர் சந்திரன் ஆகியோர் 3 ஆயிரம் லஞ்சம் வாங்கிய இருவரையும் லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 4. | 1.10.09 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் அருகே காங்கியனூர் கிராமத்தில் உள்ள திரவுபதியம்மன் கோவிலில் நடந்த தீ மிதி விழாவில் அப்பகுதி தலீத் மக்களை | தலீத் எதிராக வன்முறை காவல்நிலைய வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆலயத்துக்குள் நுழைய அனுமதி செய்யக்கோரி தீண்டாமை ஒழிப்பு முன்னனி மற்றும் மார்க்சிஸ்ட் கட்சி சேர்ந்து போராட்டம் நடத்துவதில் ஏற்பட்ட மோதலில் மார்க்சிஸ்ட் கட்சியை சேர்ந்த சுமார் 100பேரை போலீஸார் கைது செய்தனார் அம்மோதலில் 3 காவலர்களுக்கு காயம் | | |
| 5. | 1.10.09 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யம் அடுத்த செட்டிப்புலத்தில் ஏகாம்பரேஸ்வரர் காமாட்சி அம்மன் கோவில் நுழைவு போராட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் எம்.எல்.ஏ மாரிமுத்து உட்பட நூற்றுக்கு மேற்பட்டோரை போலீஸார் கைது செய்தனர் | தலீத் எதிராக வன்முறை காவல்நிலைய வன்முறை | தினகரன் |
| 6. | 1.10.09 | **மதுரை மாவட்டம்:** எஸ்.எஸ்.காலனி சட்டம் ஒழுங்கு பிரிவு இன்ஸ்பெக்டர் ஆதிவீரராமபாண்டியன் மற்றும் எஸ்.எஸ்.காலனி காவல் நிலையத்தில் பணிபுரிந்த ஏட்டு கண்ணன் ஆகிய இருவரும் குற்றவாளியை விடுவிக்க லஞ்சம் வாங்கிய இருவரையும் லஞ்ச ஒழிப்புத்துறை காவலரால் கைது செய்து சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 7. | 1.10.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** சாயல்குடி அருகே உள்ள வி.வி.ஆர் நகரில் பத்திரகாளியம்மன் கோவில் முளைப்பாரி விழா நடந்தது. அம்முளைப்பாரியை நீரிப்பையூர் கடலில் கரைக்க அனுமதி மறுத்ததால் ஏற்பட்ட மறியலில் ஈடுபட்டனர், இதனை தடுக்க போலீஸ் தடியடி நடத்தினர், அதில் 4பேர் கைது செய்யப்பட்டனர். | காவல்நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 8. | 1.10.09 | **திருச்சி மாவட்டம்:** அரியலூர் மாவட்டம் சிலம்பனூரைச் சேர்ந்த பஞ்சநாதன் மகன் மதியழகன் இவர் மூட்டு வலிக்கு சிகிச்சை எடுக்க திருச்சி அரசு மருத்துவமனை எம்.ஆர்.ஐ.ஸ்கேன் எடுக்க உதவியாளார் பரமேஸ்வரன் 2500 ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் சஸ்பெண்ட் செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 9. | 1.10.09 | **கோவை மாவட்டம்:** ஆவாரம் பாளையத்தில் உள்ள கட்டிட இடத்தினை, தனியார் அறக்கட்டளை நிர்வாகமான தாமேதிரம் தர்மஸ்தாபனத்தின் கீழ் உள்ளது. இதனை எதிர்த்து அப்பகுதி மக்கள் அப்பள்ளி கட்டிடத்தினை மாநகராட்சி கைபடுத்த வேண்டும் என்று மாக்சிஸ்ட் கட்சியினர் போராட்டம் நடத்தியபோது போலீஸார் தாக்குதல் நடத்தினர் இதில் 21 பேரை காவலர்கள் கைது செய்தனர் | | தீக்கதிர் |
| 10. | 2.10.09 | **மதுரை மாவட்டம்:** தேனி மாவட்டம், வடமலை குண்டு அருகே உள்ள | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கருப்பையாபுரம் பாண்டியம்மாள் என்ற பெண்ணுக்கு மதுரை அரசு மருத்துவமனையில் பெண் குழந்தை சத்து குமறைவாக பிறந்ததால், பாண்டியம்மாள் குடும்பத்தினர் அக்குழந்தையை மருத்துவமனையில் விட்டு சென்றனர் அக்குழந்தை சிகிச்சை பலனளிக்காமல் இறந்தது. இது குறித்து மருத்துவமனை காவல் நிலையத்தில் புகார். | | |
| 11. | 2.10.09 | **மதுரை மாவட்டம்:** கருமாத்தூர் பகுதியில் உள்ள ரேஷன் கடையில் இருந்து அனுமதியின்றி சுமார் 50 கிலோ எடை கொண்ட 50மூடை அரிசி பறிமுதல் | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 12. | 2.10.09 | **அரியலூர் மாவட்டம்:** உடையார் பாளையம் வட்டம் பெரியகிருஷ்ணபுரம் கிராமத்தில் பல்லாண்டு காலமாக தலீத் மக்களுக்கு டீக்கடைகளில் தனி டம்ளரீல் டீ வழங்கப்பட்டு வந்தது. இதனை எதிர்த்து தீண்டாமை ஓழிப்பு முன்னனி சார்பாக நடைபெற்ற போராட்டம் வெற்றி பெற்றதுழு | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 13. | 2.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** பெருமாள் சேரியைச் சேர்ந்த ராக்கப்பன், இவரது மனைவி பழனியம்மாள் இருவருகிடையே கருத்து வேறுபாட்டினால் பிரிந்து வாழ்ந்து வந்தனர், பழனியம்மாளுக்கும் மாரிகுருக்கும் பழக்கம் ஏற்பட்டு வாழ்ந்து வந்தனர் இந்நிலையில் மாரிகுரு பழனியம்மாள் அக்காள் மகளை திருமணம் செய்துகொண்டார், பழனியம்மாள் கஷ்டபட்டநிலையில் மாரிகுருவிடம் செலவுக்கு பணம் கேட்டபோது மாரிகுரு பழனியம்மாள் மேல் மண்ணெண்ணெய் உற்றினார் தீ வைத்தார். இது குறித்து டவுண் இன்ஸ்பெக்டர் வழக்கு பதிவு செய்து மாரிகுருவை கைது செய்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 14. | 2.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை சேர்மன் சங்கரன் நகரில் வசிப்பவர் நாகலிங்கசேது மகள் ராஜேஸ்வரி(40), இவருக்கும் திருமங்கலத்தைச் சேர்ந்த செல்லையா மகன் மகேந்திரன் திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளன. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருகின்றனர் இந்நிலையில் மகேந்திரன் தன் நன்பருடன் மனைவி வீட்டில் சென்று விவாகரத்து கேட்டு குழந்தைகள் கடத்திச் சென்றார், இது குறித்து நிலக்கோட்டை போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 15. | 2.10.09 | **சேலம் மாவட்டம்:** சேலம் ஆயுதப்படையில் பணி செய்யும் பெண் போலீசாரிடம் இரவு நேரங்களில் தணிக்கை என்ற பெயரில் எஸ்.ஜக்கன் சிலர் பாலியல் தொந்தரவு | காவல்நிலைய வன்முறை பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பாதாக டி.ஜி.பிக்கு புகார் அனுப்பப்பட்டுள்ளது. இது குறித்து உயர் அதிகாரிகள் விசாரனை | | |
| 16. | 2.10.09 | **நெல்லை மாவட்டம்:** கலிக்காடு பள்ளிக்குளத்தைச் சேர்ந்த சுதன் இவர் தன் நிலத்தை பெயர் மாற்றக்கோரி கள்ளிகுளம் வி.ர.ஒ. ராஜலிங்கத்திடம் விண்ணப்பித்தபோது லஞ்ச ஒழிப்பு துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 17. | 3.10.09 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே லிங்கநாயக்கன்பட்டியில் உள்ள தூர்க்கையம்மன் கோவிலில் பெண் பூசாரி பின்னியம்மாள் வழிபாடு நடத்த எதிர்ப்பு கோவிலுக்கு செல்லும் வழிகளில் மூட்களை வெட்டிப்போட்டு அடைத்தும் போலீஸாரை ஊருக்குள் நூழைய விடாமல் தடுத்தும் பொது மக்கள் போராட்டம் நடத்தினர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 18. | 3.10.09 | **சென்னை மாவட்டம்:** வடபழனி பஜனைக் கோவில் தெருவைச் சேர்ந்தவர் சாமுவேல் அண்ணாநகர் இவர் 74வது கோட்ட மாநகராட்சி சுகாதார ஆய்வாளர் இவர் காஞ்சிபுரம் மாவட்டம் சேர்ந்த மணவாளன் துப்புரவு தொழிலாளரான இவரிடம் சம்பள உயர்வு வாங்கிதருவதாக கூறி 2500 ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலரால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 19. | 4.10.09 | **மதுரை மாவட்டம்:** காமராஜபுரத்தைச் சேர்ந்தவர் ராமன் இவரது மகள் பானு இவர் தன் குடும்ப ஏழ்மையின் காரணமாக உடலில் மண்ணென்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார் இது குறித்து கீரதுரை போலீஸார் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 20. | 4.10.09 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி போலீஸ் சரகம் ஜக்கம்பட்டியைச் சேர்ந்தவர் சுப்பையா இவரது மகள் பூர்ணிமா, இவர் கல்லூரி மாணவி, இவரை ஒத்தக்கோவிலைச் சேர்ந்த ராணுவ வீரர் பரமன், கடத்தியதாக ஆண்டிப்பட்டி காவல்நிலையத்தில் புகார்., போலீஸ்க்கு பயந்து பரமன் விஷம் குடித்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |
| 21. | 4.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி ஒன்றியம் ஆனையூர் கட்டளைப்பட்டி கிராமத்தில் தலீத் அருந்ததியர் மக்கள் பொதுக் கழிப்பறையை பயன்படுத்தவும் பொதுச் சாவடியை பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டிருந்தது இதனைக் கண்டித்து தீண்டாமை ஒழிப்பு முன்னனி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்திய போராட்டத்தின் மூலம் தகர்த்தப்பட்டது | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 22. | 4.10.09 | **மதுரை மாவட்டம்:** கீழவெளிவீதியைச் சேர்ந்தவர் பிஸ்மீலூர் தில்லா இவருக்கும் சென்னையைச் சேர்ந்த பொறியியல் மாணவரான செய்யது பாட்ஷாவிற்கும் மிடையே கடந்த 2007ல் திருமணம் நடந்தது. செய்யது குடும்பத்தினர் பிஸ்மியிடம் 200 பவுண் நகை கேட்டு துன்புறுத்தியதாக மதுரை டவுண் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 23. | 5.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** இலங்கையைச் சேர்ந்தவர் ஜெயராணி(28) இவர் 8 ஆண்டுகளுக்கு முன்பு குவைத் நாட்டில் உள்ள ஒரு மருத்துவமனையில் நர்சு வேலைக்கு சென்றார். அதே மருத்துவமனையில் சிவகங்கைச் சேர்ந்த முருகன் வேலை செய்தார், முருகன் திருமணம் செய்து கொள்வதாக கூறி நெருங்கி பழகியுள்ளார். ஜெயராணியின் கட்டாயப்படுத்தியதால் தாலியை கட்டிவிட்டு முருகன் தலைமறைவு ஆனார். இது குறித்து கொல்லங்குடி காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 24. | 6.10.09 | **மதுரை மாவட்டம்:** காமராஜர் சாலை சௌராஷ்டிர மேல்நிலைப்பள்ளி பின்புறம் தூமாட்டி ரெங்கசாமி அய்யன் சந்து, இப்பகுதியில் கொண்டிதொழு வடக்குத் தெரு சந்திப்பில் தேவர் சிலையை போலீஸ் அனுமதி பெறாமல் வைத்துள்ளனர் சிலையை போலீஸார் அகற்றினர் இதனை எதிர்த்து திமு.க. கவுன்சிலர் செந்தில் உள்ளிட்டோர்.. தகராறு செய்ததால் சிலர் கல்வீசியதில் ஒரு பெண் போலீஸாருக்கு காயம் போலீஸ் தடியடி நடத்தியதில் ஒருவர் காயம். | காவல்நிலைய வன்முறை | தினமணி |
| 25. | 6.10.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை வேனில் கடத்தப்பட்ட 500 மூட்டை ரேஷன் அரிசியை போலீஸார் திங்கட்கிழமை இரவு பறிமுதல் | ரேஷன் அரிசி கடத்தல் | தினமணி |
| 26. | 6.10.09 | **விழுப்புரம் மாவட்டம்:** ஊளுந்தூர் பேட்டை அடுத்த களமருதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் உதவி தலைமை ஆசிரியராக பணியாற்றி வருபவர் மந்திரி இவர் இப்பள்ளியில் படிக்கும் 6ம் வகுப்பு மாணவன் ஆனந்தபாபுவிடம் ஹேமோ செக்ஸ் டார்ச்சர் கொடுத்துள்ளார் இது தொடர்பாக சி.இ.ஒ. குப்புசாமி சஸ்பெண்ட் உத்தரவு கொடுத்துள்ளார். மற்றும் ஆசிரியரை போலீஸார் கைது செய்துள்ளனர். | பள்ளி வன்முறை | தினமணி |
| 27. | 6.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே தொத்தன்குளம் ஊராட்சியில் உள்ள வடக்காசியம்மன் கோவில் கும்பவிஷேகம் நடத்துவதில் ஏற்பட்ட பிரச்சனையில் இருதரப்பினரிடையே மோதல் ஏற்பட்டதில் | சாதிய வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3பேர்க்கு அரிவாள் வெட்டு, 13 பேர்க்கு காயம் இது தொடர்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் டி.எஸ்.பி. வழக்கு பதிவு செய்து விசாரனை நடத்தி வருகிறார். | | |
| 28. | 6.10.09 | **மதுரை மாவட்டம்:** தெற்கு வாசல் பகுதியைச் சேர்ந்தவர் மகேஸ்வரி (22) இவரை அதே பகுதியை சேர்ந்த முத்துராஜ் அருண்பாண்டி இருவரும் மகேஸ்வரியை கேலி கிண்டல் செய்துள்ளார் இது குறித்து தெற்கு வாசல் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 29. | 7.10.09 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி அருகே உள்ள மனப்பச்சேரி ஊராட்சியைச் சேர்ந்த வல்லவன்(320 இவரது சகோதரிகள் இருவருக்கும் வீட்டுக்கு மீன் இணைப்பு பெற இருப்பிடச் சான்றிதழ் கேட்டு கிராம நிர்வாக அதிகாரி கருணாநிதி அணுகியபோது கருணாநிதி 600ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை போலீஸாரால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினமணி |
| 30. | 7.10.09 | **சென்னை மாவட்டம்:** நூங்கம்பாக்கத்தில் லயோலா கலை அறிவியல் கல்லூரியில் முதுகலை பட்டப்படிப்பு மாணவ, மாணவிகள் கல்வி தொடர்பாக செங்கல்பட்டு அருகே உள்ள கிராமத்துக்கு சுற்றுலா சென்ற போது வயல்வெளியில் உள்ள பம்புசெட்டில் மாணவர்கள், மற்றும் மாணவி குறித்த காட்சியை செல்போனில் படம்பிடித்தாக 8 மாணவர்கள் மற்றும் ஒரு மாணவி சஸ்பெண்ட் செய்யப்பட்டார். | பள்ளி வன்முறை | தினத்தந்தி |
| 31. | 7.10.09 | **விழுப்புரம் மாவட்டம்:** சுரையூர் பகுதியில் உள்ள பேராலயத்தில் நடந்த திருவிழாவின் போது தலீத் கிறிஸ்துவர்களை பேராலயத்தில் வழிபட வனியர் கிறிஸ்துவர்கள் தடைவிதித்ததால் அப்பகுதியில் உள்ள தலீத் கிறிஸ்துவர்கள் ஏரையூர் ஊரைவிட்டு வெளியேறினர். | தலீத் எதிரான வன்முறை | எக்ஸ்பிரஸ் |
| 32. | 8.10.09 | **கோவை மாவட்டம்:** தாராபுரம் அருகே உள்ள குண்டடம் பகுதியில் தொடர்ந்து வரும தீண்டாமை கொடுமைகளை உடனடியாக களைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயி தொழிலாளர் சங்க தாலுகா பேரவை வலியுறுத்துகிறது | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 33. | 8.10.09 | **மதுரை மாவட்டம்:** சிலைமானில் உள்ள ஒரு ரேசன் கடையில் இருந்து 400 கிலோ ரேசன் அரிசியை கடத்தமுயன்ற போது பொதுமக்கள் மூலம் பிடிக்கப்பட்டு காவல் நிலையத்தில் ஒப்படைப்பு | ரேஷன் அரிசி கடத்தல் | தினமணி |
| 34. | 8.10.09 | **சேலம் மாவட்டம்:** காரிப்பட்டி நல்லான்பாறை ஒடை பகுதியில் ஒன்றரை வயது குழந்தையின் | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கை, கால், தலையை, வெட்டி நரபலி கொடுத்த கும்பலை போலீஸார் தேடுகின்றனர். | | |
| 35. | 9.10.09 | **சென்னை மாவட்டம்:** வெளச்சேரி கன்னிகாபுரத்தைச் சேர்ந்தவர் அசோக்குமார் இவர் கிண்டி ஐ.ஐ.டியில் எம்.டெக் படித்து வருகிறார். இவரது வீட்டுக்கு துண்டிக்கப்பட்ட மீன் இணைப்பை மீண்டும் வழங்க கோரி மின்வாரிய அலுவலகத்தின் உதவி என்ஜீனியர் ராகராஜீ 2 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புதுறை காவலர்களால் கைது செய்யப்பட்டார் | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 36. | 9.10.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** கவர்னகிரியை சேர்ந்தவர் துரைபாண்டி, ஆட்டோ டிரைவர் இவருடைய மனைவி ரேவதி(22), இவரது தலை பிரசவம் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் இரட்டை பெண் குழந்தை பிறந்தது. முதல் பிரசவத்தில் இரண்டும் பெண்குழந்தைகள் என்ற அதிர்ச்சியில் ரேவதியும் அவரது தாயார் தேன்நிலவும் இரு பெண்குழந்தையை கழுத்தை திருகி கொலை செய்தனர் இது குறித்து தென்பாகம் காவல் நிலையத்தில் புகார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 37. | 9.10.09 | **கேவை மாவட்டம்:** கோவை புலியகுளம் புனித அந்தோனியார் வீதியைச் சேர்ந்தவர் அமல்ராஜ் இவருடைய மனைவி ஸ்டெல்லா மேரி இவர் மேட்டுபாளையத்தில் உள்ள ஜி.ம். ஆர்.சி. அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளி ஆசிரியாராக வேலை பார்த்து வந்தார் இவருடைய பணி நிரந்தரத்துக்காக கோவை டவுண்ஹால் பகுதியில் உள்ள மாவட்ட தொடக்க கல்வி அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் பாலசந்திரன் 20,000, லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 38. | 9.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை தெருவைச் சேர்ந்தவர் சகுந்தலா இவருடைய மகள் பிருந்தா இவர் அப்பகுதியில் உள்ள பள்ளியில் 9ம் வகுப்பு பயின்று வருகிறார். இவர் வீட்டின் அருகே வசிக்கும் முனியாண்டி மகன் சபரி(18) என்பவர் பிருந்தாவை மானபங்கம் செய்ய முயன்றதால் பிருந்தா எலி மருந்து சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து ராஜபாளையம் வடக்கு போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 39. | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி அருகே உள்ள வீரசூடாமணிபட்டியைச் சேர்ந்தவர் ஆண்டிச்சாமி இவரது மகன் அருன் (எ) | பள்ளி வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அருண்பாலன் இவர் திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டியில் உள்ள விடுதியில் தங்கி கொசுவம்பட்டியில் உள்ள பள்ளியில் 12ம் வகுப்பு பயின்று வந்தார். இவர் வயிற்றுவலியின் காரணமாக அருண் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார் இது குறித்து கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் புகார். | | |
| **40.** | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் அருகே உள்ள தண்டலை கிராமத்தைச் சேர்ந்தவர் கந்தசாமி இவரது மகள் தனபாண்டியம்மாள், இவரை அதே கிராமத்தைச் சேர்ந்த கூலித்தொழிலாளி விஜயகுமார் என்பவர் தனபாண்டியம்மாளை மானபங்கம் செய்ய முயன்றுள்ளார் இதனால் மனம் உடைந்த தனபாண்டியம்மாள் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து அலங்காநல்லூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **41.** | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** பேரையூர் தாலுகாவில் உள்ள எம்.கல்லூப்பட்டி மற்றும் அதன் சுற்றி உள்ள பகுதிகள் 125 உடல் ஊனமுற்றோர்கள் இரண்டு முன்று வருடங்களுக்கு முன்பு விண்ணப்பித்த மனுக்களுக்கு இதுவரை உதவி தொகை கிடைக்காததை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் முருகன் தலைமையில் சாலை மறியல் போராட்டம் நடத்திய ஊனமுற்றோர்களை காவலர்கள் கைது செய்தனர். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| **42.** | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** தத்தனேரி வைத்தியநாதபுரம் பகுதியைச் சேர்ந்தவர் செல்லையா மகன் பூபதி, இவர் செல்லூர் பகுதியில் ஒரு பள்ளி நடத்தி வருகிறார் இவர் சரவணன் என்பவரிடம் ஒரு இடத்தை கிராயம் செய்துள்ளார் இவருக்கும் ஆனையூர் பகுதியில் உள்ள ஜெயலட்சுமிக்கும் தகராறு ஜெயலட்சுமி தல்லாக்குளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அப்போது பொறுப்பாக இருந்த இன்ஸ்பெக்டர் செல்லூர் குற்றபிரிவு இன்ஸ்பெக்டர் ரவீந்தரார், சரவணன் பூபதியை தாக்கி, பணம் 22 ஆயிரத்தையும் 2 செல்போன் பறித்தாக இருவரும் மதுரை ஜக்கோர்ட்டில் புகார். இது தொடர்பாக அக்காவலர்கள் மீது வழக்கு பதிவு செய்ய ஜக்கோர்ட் உத்தரவு. | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| **43.** | 9.10.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செய்யூர் தாலுகா சூணாம்மேடு கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜகோபால் இவரது மனைவி அமுதாவின் சொத்து தொடர்பாக முன்று ஆண்டுகளுக்கு சிட்டா அடங்கல் நகல் பெற ராஜகோபால் திண்டிவனம் தாலுகா அலுவலகத்திற்கு | லஞ்ச ஊழல் | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்றார், அங்கு பதிவரை எழுத்தர் ராமானுஜம் 500 ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | | |
| 44. | 9.10.09 | **கடலூர் மாவட்டம்:** விழுப்புரம் மாவட்டம் கரடிசித்தூரைச் சேர்ந்தவர் அய்யம்பெருமாள் இவரது மனைவி தங்கம், கள்ளச்சாராய வியாபாரியான அய்யம் பெருமாள் கைது செய்யப்பட்டு கள்ளக்குறிச்சி கிளைசிறையில் விசாரனைக் கைதியாக அடைக்கப்பட்டிருந்தார் இடநெருக்கடி காரணமாக இவரை கடலூர் மத்திய சிறைசாலையில் விசாரனை கைதியாக கடந்த 5ம் தேதி மாற்றப்பட்டார். அங்கு வந்த சிறிது நேரத்திலேயே வயிற்று வலியால் துடித்து இறந்தார், இது குறித்து ஆர்.டி.ஒ. செல்வராஜ் விசாரனை செய்கிறார். | காவல்நிலைய மரணம் | தினகரன் |
| 45. | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** எம்.கே.புரம் மெயின் ரோட்டைச் சேர்ந்தவர் வேன் டிரைவர் பாலகண்ணன் இவரது மனைவி ராதிகா, இவர் கூடுதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 46. | 9.10.09 | **மதுரை மாவட்டம்:** கரிமேட்டைச் சேர்ந்தவர் அப்துல்சலீம் தெற்கு வெளி வீதியைச் சேர்ந்தவர் சுனில்பாத்திமா இவரது கணவர் குடும்பத்தினர் கூடுதல் வரதட்சனை கேட்டதாக கரிமேடு போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 47. | 10.10.09 | **மதுரை மாவட்டம்:** சத்திரப்பட்டியைச் சேர்ந்த 21 வயது இளம்பெண்ணுக்கு சோலை ராஜீக்கும் காதல் ஏற்பட்டது. சேலைராஜீக்கு ஏற்கனவே திருமணம் ஆகி குழந்தை உள்ளது, தனக்கு திருமணம் ஆகவில்லை என்று கூறி திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றி பாலியல் பலாத்காரம் செய்துள்ளார் இது குறித்து திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 48. | 10.10.09 | **அரியலூர் மாவட்டம்:** குருவாலப்பர் கோவில் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி பாரதி தனது தாயர் தமிழரசி பெயருக்கு பவர் பத்திரம் பதிவு செய்ய லஞ்சம் கேட்ட சார்பதிவாளர், கோபானிடம் 500 ரூ கொடுத்தார். இவருக்கு உடந்தையாக எழுத்தர் காமராஜ் ஆகிய இருவரையும் லஞ்ச ஒழிப்புதுறை காவலர்களால் கைது செய்யப்பட்டனர். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 49. | 10.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை ஒன்றியம் செம்பட்டி அம்பேத்கர் காலனியில் சுடுகாடு மற்றும் பெண்களுக்கு கழிப்பறை வசதி இல்லை. இதனைக் கோரிக்கையாக வைத்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர் | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 50. | 10.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** சூரக்குடியைச் சேர்ந்த 23 வயது பட்டதாரி இளைஞர் கனகராஜ் இவர் ஊனமுற்றவர் இவரை எஸ்.வி.மங்களம் காவல் நிலையத்தில் கடுமையாக தாக்கி கொடுமைபடுத்தி சித்திரவதை செய்ததை மார்க்சிஸ்ட் கட்சி வன்மையாக கண்டித்துள்ளது. | ஊனமுற்றோர்களுக்கு எதிரான வன்முறை & காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |
| 51. | 11.10.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஸ்வரம் மண்டபம் மற்றும் பாம்பன் பகுதிகளில் மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். | மீனவர் மீதான வன்முறை | மாலை மலர் |
| 52. | 11.10.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் மாநகராட்சி காலனியைச் சேர்ந்தவர் பரமசிவம் இவர் அதே பகுதியில் பலசரக்கு கடை வைத்து நடத்தி வருகிறார் இவரது மனைவி சித்ரா. அதே காலனியை சேர்ந்தவர் ஆறுமுகம்(35) பரமசிவத்திற்கும் தகராறு ஏற்பட்ட போது ஆறுமுகம் மளிகை கடை பொருட்களை எடுத்து ரோட்டில் வீசியதோடு தடுக்க வந்த சித்ராவை மானபங்கம் செய்தார் இது குறித்து அவனியாபுரம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |
| 53. | 11.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஏ.டி.பி காம்பவுண்ட் சேர்ந்தவர் தங்கப்பாண்டியன் இவர் மனைவி ராக்கம்மாள், தங்கபாண்டியனுக்கும் காந்திபுரம் தெருவைச் சேர்ந்த பாண்டியம்மாளுக்கும் தொடர்பு இருந்தது. இதைக் கண்டித்த ராக்கம்மாளுக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக விருதுநகர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் சுடர் |
| 54. | 11.10.09 | **மதுரை மாவட்டம்:** சுந்தராஜபுரத்தைச் சேர்ந்தவர் கணேசன்(30) இவரது மனைவி கனிமொழி (28), கணேசன் தன் மனைவியிடம் ஓர்க்சாப் வைக்க கூடுதல் பணம் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக மதுரை நகர் மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 55. | 11.10.09 | **மதுரை மாவட்டம்:** ஒத்தக்கடையைச் சேர்ந்தவர் கணேசன் மனைவி கலா, இவர் 13 ஏக்கர் நிலங்களை வேறு நபர்க்குப் போலி பட்டா மூலம் மாற்றித்தந்த வி.ஏ.ஓ. போஸ் மந்தைவீரர் தலையாரி உட்பட 5 பேர் மீது மேலூர் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | மோசடி | தினமலர் |
| 56. | 12.10.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** திருவிதங்கோடு பேரூராட்சி ஆறாவது வார்டு தி.மு.க. கவுன்சிலர் வேலப்பன். இவர் பேரூராட்சி அலுவலகத்தில் இளம் நிலை உதவியாளர் சபீனா, பதிவறை எழுத்தர் சமீமா | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | பீவி இருவரையும் வேலப்பன் ஆபாசமாக திட்டியதாக தக்கலை போலிஸார் பெண்கள் வன்கொடுமை சட்டத்தின் கீழ் கைது செய்தனர். | | |
| 57. | 12.10.09 | **கோவை மாவட்டம்:** குரும்பாளையத்தில் மத்திய ரிசர்வ் போலீஸ் படையினருக்கான பயிற்சி முகாமிற்கு பயிற்சிக்கு வந்த ரிசர்வ் போலீஸ் 5பேர் குடிபோதையில் அங்குள்ள வீட்டுக்குள் புகுந்து பெண்களிடம் அத்துமீறி நடந்து கொண்ட மத்திய ரிசர்வ் போலீஸார் 3 பேர் கைது செய்யப்பட்டனர் 2பேர் தப்பி ஒடிவிட்டனர். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 58. | 12.10.09 | **வேலூர் மாவட்டம்:** அடுக்கம்பாறையைச் அடுத்த நெல்வாய் கிராமத்தைச் சேர்ந்தவர் திருநாவுகரசு விவசாயி இவரின் 2 வது மகள் அனுபிரியா, இவர் அப்பகுதியில் உள்ள பள்ளியில் 9ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் சில மர்ம ஆசாமிகளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார் இது குறித்து போலீஸார் விசாரனை செய்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 59. | 12.10.09 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூரில் நடந்த விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்தில் ஏற்பட்ட மோதல் சம்பவம் தொடர்பாக போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் இரண்டு பேர் சஸ்பெண்டு செய்ய போலீஸ் டி.ஐ.ஜி உத்தரவு விட்டுள்ளார். | காவல்நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 60. | 12.10.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் தாலுகா நடுத்தெரு காலனியைச் சேர்ந்தவர் நாராயணன் அதே பகுதியில் குடியிருப்பவர் சக்கரத்தாய் பேத்தி மலர், இவரை நாராயணன் பாலியல் பலாத்காரம் செய்ததாக திருமங்கலம் மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 61. | 13.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள கொந்தராயன் குளத்தைச் சேர்ந்தவர் பிச்சை விவசாயி இவரது மகன் செல்லத்துறை(22), இவர் ஒரு தனியார் கல்லூரியில் பி.லிட் படித்து வருகிறார், இவரது குடும்பம் மிகவும் ஏழ்மையானது என்பதால் கல்லூரி கட்டணம் கட்ட இயலாததால், அங்குள்ள நாட்டுமையாக்கப்பட்ட வங்கிக்கு தேவையான சான்றுகளுடன் கடந்த சில நாட்களுக்கு முன் சென்றார் அவ்வங்கியில் அலைக்கழித்தனர் இந்த விரத்தியில் செல்லத்துறை தீக்குளித்தார். | அரசு தன் கடமை செய்யாமை | தமிழ்சுடர் |
| 62. | 13.10.09 | **சென்னை மாவட்டம்:** ரேஷன் அரிசியை வெளிமாநிலங்களுக்கு கடத்தி விற்ற 100 பேர் மீது தடுப்பு காவல் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். | ரேசன் அரிசி கடத்தல் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 63. | 13.10.09 | **மதுரை மாவட்டம்:** கே.புதூர் அழகர் நகரைச் சேர்ந்தவர் ஆவத்தி இவரது மகள் கனகவள்ளி இவருக்கும் மானாமதுரையை அடுத்த பெரும்பசேரியை சேர்ந்த துரைராஜ் இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இந்நிலையில் துரைராஜ் வேறு சில பெண்களுடன் தொடர்பு வைத்திருந்தாக இதனைக் கண்டித்த கனகவள்ளியை துரைராஜும் அவரது தம்பி பாலுவும் அடித்து உதைத்ததில் கனகவள்ளியின் விரல் துண்டானது. இது குறித்து கே.புதூர் காவல் நியைத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 64. | 13.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களை அதிகாரிகள் இழிவான மற்றும் தகாத வார்த்தைகளை பயன்படுத்தி அடிக்கடி தட்டி வருகின்றனர். இதனை கண்டித்து சிஐடியு சார்பில் ஆர்பாட்டம் நடைப்பெற்றது. | தலித் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 65. | 13.10.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** கார்த்தியகவுண்டர்பட்டி அருகே செப்பட்டி பகுதியைச் சேர்ந்த முத்துமணி இவர் கண் பார்வையற்றவர், இவர் குணசேகரன் என்பவரைத் திருமணம் செய்து 15 வயது பெண் குழந்தையுள்ளது. இந்நிலையில் குணசேகரன் கூடதல் வரதட்சனை கேட்டதாக முத்துமணி திண்டுக்கல் காவல் கண்காணிப்பாளரிடம் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | எக்ஸ்பிரஸ் |
| 66. | 13.10.09 | **நாமக்கல் மாவட்டம்:** திருப்பூரைச் சேர்ந்தவர் ஜவுளி கடை வியாபாரி ராஜேஸ் தீபாவளியை முன்னிட்டு திருச்செங்கோட்டில் ஜவுளிகடை வைக்க முடிவு செய்தார். மாவட்ட நிர்வாக அனுமதி வேண்டு பி.ஆர்.ஒ. பால்ராஜை அனுகியபோது 10 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக பால்ராஜ் லஞ்ச ஒழிப்புதுறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 67. | 13.10.09 | **மதுரை மாவட்டம்:** பல்கலை நகர் செக்காரலூரணி ரேஷன் கடைகளில் கலெக்டர் மதிவாணன் ஆய்வு செய்ததில் விற்பனையாளர்கள் பதுக்கி வைத்திருந்த 22 போலீ ரேஷன் கார்டுகள் கைப்பற்றினர் இரு விற்பனையைாளர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். | ஊழல் | தினமலர் |
| 68. | 13.10.09 | **மதுரை மாவட்டம்:** வடக்குமாசி வீதியைச் சேர்ந்தவர் முருகவள்ளி இவரது கணவர் 4 ஆண்டுகளுக்கு முன்வு இறந்துவிட்டார் இந்நிலையில் 3 குழந்தைகளுடன் இருக்கும் முருகவள்ளியை வீட்டை விட்டு வெளியேறுமாறு அவரது கணவர் வீட்டார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | துன்புறுத்தியதால் தன் 3 குழந்தைகளுடன் முருகவள்ளி போலீஸ் கமிஷனரிடம் புகார். | | |
| 69. | 14.10.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே உள்ள சுந்தராஜபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் வெள்ளைச்சாமி விவசாயி இவரது மகள் சரஸ்வதி, அதே பகுதியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் என்பவர் மகன் ராமராஜீவும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர், இந்நிலையில் ராமராஜீ அடிக்கடி பணம் கேட்டு மனைவி சரஸ்வதியை தொந்தரவு செய்துள்ளார். முன்று மாதங்களுக்கு முன்பு சரஸ்வதி குளிக்க செல்வதாக சென்றவர் வீடு திரும்பவிலை, இது குறித்து சேத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர், இந்நிலை காணமல் போன சரஸ்வதி சுந்தராஜபுரம் கிராமத்தின் ஒதுக்குப்புறமாக உள்ள குலத்தைகுளம் கண்மாய் பகுதியில் கொல்லப்பட்டு இறந்து கிடந்தார். இது குறித்து சேத்தூர் ஊரக போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரனை மேற்கொண்டு வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலை மலர் |
| 70. | 14.10.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் அருகே பறையன்குளத்தை திருமலையூர் என பெயர் மாற்ற வேண்டும் என ஒரு பிரிவினர் தெரிவித்தனர் இதற்கு மற்றொரு பிரிவினர் எதிர்தப்பு தெரிவித்தனர் இப்பிரச்சனை தொடர்பாக நேற்று முன்தினம் தகராறு ஏற்பட்டது. இதில் மனோரஞ்சிதம், பழனியம்மாள், பிரேமா(21) ஆகியோரை ஜாதி பெயர் சொல்லிதிட்டியும் தாக்கப்பட்டனர் வீடுகளை சூறையாடினர் இதில் 3போரும் படுகாயம் அடைந்தனர், இது குறித்து திருப்பரங்குன்றம் டி.எஸ்.பி. வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | தலீத் எதிரான வன்முறை | தமிழ் முரசு |
| 71. | 14.10.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பறங்குன்றம் கீழத்தெருவைச் சேர்ந்தவர் பிரபு இவரது அக்கா லெட்சுமியின் கணவர் கிவானந்தம் இப்பகுதியில் புதிதாக வீடுகட்டி வருகிறார். இவர் மின் இணைப்பு வாங்குவதற்காக வீட்டுவரி செலுத்துவதாக திருப்பரங்குன்றம் நகராட்சிக்கு பில்கலெக்ட்டராக பணிப்புரியும் ராஜா என்பவரை அணுகினார். இவர் வீட்டு வரி போட 600ரூ லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தமிழ் முரசு |
| 72. | 14.10.09 | **மதுரை மாவட்டம்:** பைபாஸ்ரோடு பகுதியில் வசிப்பவர் அசோகன்(34) இவரது மனைவி அனிதா, இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளன. குடும்பதகராரின் காரணமாக | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ் முரசு |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணவன் மனைவி இருவரும் பிரிந்து வாழ்கின்றனர். இந்நிலையில் அசோகன் அனிதாவை நடுரோட்டில் சேலையைப்ப பிடித்து இழுத்து அசிங்கமாகக் பேசி மானபங்கம படுத்தியதாக கரிமேடு போலீஸார் அசோகனை கைது செய்தனர். | | |
| 73. | 14.10.09 | **மதுரை மாவட்டம்:** கீரைத்துறையைச் சேர்ந்தவர் சுந்தரம், இவரது மனைவி தமிழ்செல்வி இதேப்பகுதியைச் சேர்ந்தவர் முத்து இவரது மனைவி மாரியம்மாள் வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக கூறி மாரியம்மாள் மற்றும் அவரது உறவினர்கள் 5 பேர் சேர்ந்து தமிழ்செல்வியிடம் ஆசை வார்த்தை கூறி 1.5 லட்சம் மோசடி செய்துள்னர் இது குறித்து மதுரை மத்திய குற்றப்பிரிவு போலீசார் வழக்குபதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | மோசடி | தமிழ் முரசு |
| 74. | 15.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** திருப்புவனத்தைச் சேர்ந்தவர் அப்துல்கபூர் தாக்கல் செய்த ஹேபில் சார்பஸ் மனுவில் அவரது மகன் பிரோடஸ்பானுவுக்கும், சாகுல்அமிர்க்கும் திருமணம் நடந்தது. அவர் மலேசியாவில் வேலை செய்து வருகிறார். கணவருடன் ஏற்பட்ட பிரச்சனையில் பிரேகடஸ்பானு திரும்பினார் திருவரங்கத்தை சேர்ந்த அலிஜமால் என்பவர் பிரோடஸ்பானுவை மலோசியாவிற்கு கடத்தி சென்றதாகவும் மகளை மீட்டு ஆஜர்படுத்த கோரி புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 75. | 15.10.09 | **நாகை மாவட்டம்:** வேதாரண்யத்தை அடுத்த செட்டிப்புலம் கிராமத்தில் ஏகாம்பரேஸ்வரர் கோவில். ஆதிதிராவிட மக்களை கோவிலுக்குள் நுழைய கடும் எதிர்ப்பு இதனால் திடீர் கலவரம் ஏற்பட்டது. இதனால் போலீஸார் துப்பாக்கி சூடு தடியடி நடத்தி கலவரத்தைக் கட்டுப்படுத்தினர். | தலீத் எதிரான வன்முறை& காவல் வன்முறை | |
| 76. | 15.10.09 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரை சாஸ்தா நகரைச் சேர்ந்தவர் சுரேஷ் இவருடைய மனைவி சண்முகபிரியா இவர் தனது பிரசவத்திற்காக மதுரை அரசு மருத்துவமனையில் ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தையின் தலையில் வெள்ளை முடியாக இருந்ததால் சண்முகபிரியா, மருத்துவமனை தொட்டில் குழந்தை திட்டத்தில் போட்டு சென்று விட்டார், இது குறித்து மருத்துவமனை போலீஸார் விசாரித்து வருகின்றனர். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 77. | 15.10.09 | **வேலூர் மாவட்டம்:** ராணிப்பேட்டை ஆஞ்சனேயர் கோவில் தெருவில் உள்ள ரேஷன் கடையை அமைச்சர் வேலு செய்த சோதனையில் எடையாளர் பிச்சைமூர்த்தி | ரேஷன் கடைகளில் முறைகேடு | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | அநாகரிகமாக பேசுவதோடு உணவுப்பொருட்களை சரியான முறையில் வழங்குவதில்லை என்ற புகாரில் எடையாளர் பிச்சைமூர்த்தி உடனடியாக கைது செய்யப்பட்டார். | | |
| 78. | 15.10.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே உள்ள தாளையூத்து பட்டியைச் சேர்ந்தவர் சின்னராஜ, இவரது மனைவி சிவகோகிலா இவரை கணவர் மற்றும் அவரது குடும்பத்தினர் கூடுதல் வரதட்சனைக் கேட்டு துன்புறுத்தியதாக திருமங்கலம் மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 79. | 15.10.09 | **தேனி மாவட்டம்:** பாரஸ்ட் ரோட்டைச் சேர்ந்த பாரதிதாசன் வசந்தா தம்பதியினருக்கு 13 மாத கைக்குழந்தை உள்ளது. இவர் தச்சு தொழிலாளி வறுமையின் காரணமாக வசந்தா தனது 13 மாத பெண் குழந்தையை வைகை அனையில் வீசினார், சந்தர்ப்பவசமாக அப்பெண் குழந்தை காப்பாற்றப்பட்டது. இது குறித்து வைகை அணை புறக்காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. | பெண்களுக்கு எதிரான வன்முறை& வறுமை | தீக்கதிர் |
| 80. | 15.10.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** செங்கல்பட்டை அடுத்த கொத்தூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வி என்பவருக்கும், விஜயகுமாருக்கும் 18 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர் இரண்டு பெண் குழந்தையும் ஒரு ஆண் குழந்தையும் உள்ளனர். இருவரிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்துள்ளனர். கடந்த 6 ஆண்டுகளுக்கு முன்பு முத்தமகள் மீனா மகன் பாலாஜியையும் வெளிநாட்டில் படிக்க வைப்பதாக கூறி கணவர் அழைத்து சென்றார். தற்போது தன் கணவனிடம குழந்தைகள் எங்குள்ளனர் என்று கேட்டதற்கு அவர் பதில் ஏதும் கூறவில்லை. இதனால் செல்வி, தன் இரண்டு குழந்தைகளை மீட்டு தரக்கோரி சென்னை உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 81. | 16.10.09 | **மதுரை மாவட்டம்:** திருநகர் தனக்கன் குளத்தைச் சேர்ந்தவர் ஆறுமுகம் இவரது மகன் முத்துபாண்டி இவர் தனியார் மேல்நிலைப்பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வந்தார். இவர் சரியாக படிக்காததால் ஆசிரியர் திட்டியதால் மூத்துபாண்டி உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து திருநகர் போலீஸில் புகார். | பள்ளி வன்முறை | தமிழ் முரசு |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| **82.** | 16.10.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஜமுனாமரத்துரில் வாழும் மலைவாழ் மக்கள் மீது பொய்வழக்கு போடும் வனத்துறை அதிகாரிகளை கண்டித்து வி.தொ.ச.சார்பில் ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம் நடைபெற்றது. | காவல் நிலைய வன்முறை | ஜன சக்தி |
| **83.** | 16.10.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றத்தைச் சேர்ந்த கதிரேசன் மகள் பாப்பாத்திக்கும், அதே பகுதியியைச் சேர்ந்த சங்கருக்கும் பல மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. கங்கர் ஏற்கெனவே திருமணம் ஆனவர் என்பது தெரியவந்ததால் இருவருக்கும பிரச்சினை வந்துள்ளது. இந்நிலையில் கூடல்மலை அருகே பாப்பாத்தி இறந்த நிலையில் கிடந்தார், இது குறித்து போலீஸார் விசாரனை நடத்தி வருகிறார்கள். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்